SHANKAR IAS ACADEMY
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

**BATCH II**
**TEST – 9**

# 2026 GROUP II/IIA
# பொதுத் தமிழ்

பதிவு எண்

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

---

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத் தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும், எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு, எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக் காட்ட வேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் A), (B), C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் A) அல்லது B) அல்லது C) அல்லது D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள்** (E) **என்பதை அவசியம் நிரப்ப வேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக் கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
9. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. அனைத்து வினாத் தொகுப்புகளிலும் ஆங்கில வடிவே இறுதியானது.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

---

[Turn over



SHANKAR IAS ACADEMY

# பகுதி – ஆ — பொதுத் தமிழ்

**வினாக்கள் : 1–200** **மொத்த மதிப்பெண்கள் : 300**
**Questions : 1–200** **Total Marks : 300**

## TEST – 9

1. சேர்த்து எழுதுக: ஆள் + நலம்
A) ஆள்நலம்
B) ஆநலம்
C) ஆனலம்
D) ஆணலம்
E) விடை தெரியவில்லை

2. சரியான இணையைத் தேர்வு செய்க.
I. முன் + நாள் – முன்னாள்
II. கல் + தூண் – கற்றூண்
III. மண் + தாழி – மட்டாழி
IV. முதல் + முதல் – முதல்முதல்
**குறியீடுகள்:**
A) I மற்றும் II
B) I, II மற்றும் III
C) I, II, IV சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

3. பொருத்துக:
a) PROTOCOL — 1. தாங்கி
b) PROJECTOR — 2. நெறிமுறைகள்
c) PEDESTAL — 3. விதிமுறைத் திறனாய்வு
d) PRESCRIPTIVE CRITICISM — 4. படவீழ்த்தி
**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

4. **கூற்று 1** : முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள் ஆகும்.
**கூற்று 2** : சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.
**கூற்று 3** : சார்பெழுத்துகள் மொத்தம் 'முந்நூற்று எழுபது' என்பார் நன்னூலார்.
A) கூற்று 1, 2 சரி, 3 தவறு
B) கூற்று 3, 2 சரி, 1 தவறு
C) கூற்று 1, 2 தவறு, 3 சரி
D) கூற்று 2, 3 தவறு, 1 சரி
E) விடை தெரியவில்லை

5. இசைநிறை அளபெடை என அழைக்கப்படுவது ____________.
A) செய்யுளிசை அளபெடை
B) இன்னிசை அளபெடை
C) சொல்லிசை அளபெடை
D) ஒற்றளபெடை
E) விடை தெரியவில்லை


SHANKAR IAS ACADEMY

6. **கூற்று** : ‘குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு’ – இக்குறட்பாவில் ‘சொல்லிசை அளபெடை’ பயின்று வந்துள்ளது.

**காரணம்** : ‘தழீ’ என்னும் தொழிற்பெயர்ச்சொல், ‘தழீஇ’ என வினையெச்ச சொல்லாகத் திரிந்து அளபெடுத்துள்ளது.

**குறியீடுகள்:**

A) கூற்று சரி; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

7. பிரித்து எழுதுக – செந்தமிழே

A) செம் + தமிழே
B) செம்மை + தமிழ்
C) செம்மை + தமிழே
D) செ + தமிழே
E) விடை தெரியவில்லை

8. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

(i) விளித்தொடர்களில் வல்லினம் மிகாது
(ii) இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்
(iii) படி என்று முடியும் வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

**குறியீடுகள்:**

A) கூற்று - (i), (ii), (iii) தவறு
B) கூற்று - (i), (ii) சரி, (iii) தவறு
C) கூற்று - (i), (ii), (iii) சரி
D) கூற்று - (i) சரி, (ii), (iii) தவறு
E) விடை தெரியவில்லை

9. **கூற்று 1** : செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**கூற்று 2** : செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாக அளபெடுப்பது இசைநிறை அளபெடை ஆகும்.

**குறியீடுகள்:**

A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
D) இரு கூற்றுகளும் தவறு
E) விடை தெரியவில்லை

10. சந்திப் பிழையற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.

I. திருநிறைச்செல்வன்
II. மாணவர்கள் நீதிக்கதைப் படித்தனர்
III. தந்தைப் பழங்களை மரத்திலிருந்துப் பறித்தார்
IV. பெரியாற்றுப் பாசனக் கால்வாய்

**குறியீடுகள்:**

A) II மட்டும்
B) III மட்டும்
C) IV மட்டும்
D) I மட்டும்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

11. நன்னூலார் குறிப்பிட்டுள்ள சார்பெழுத்துகளின் எண்ணிக்கையைப் பொருத்துக.

| | |
|---|---|
| a) உயிரளபெடை | 1. இருபத்தொன்று |
| b) ஒற்றளபெடை | 2. முப்பத்து ஏழு |
| c) குற்றியலிகரம் | 3. நாற்பத்திரண்டு |
| d) குற்றியலுகரம் | 4. முப்பத்து ஆறு |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

12. சரியான இணையைத் தேர்வு செய்க

(i) நல்ல படாஅ பறை – செய்யுளிசை அளபெடை
(ii) கெடுப்பதூஉம் கெட்டார்க்கு – இன்னிசை அளபெடை
(iii) உரனசைஇ உள்ளம் – சொல்லிசை அளபெடை

**குறியீடுகள்:**

A) (i), (ii), (iii) தவறு
B) (i), (ii) சரி; (iii) தவறு
C) (i), (ii), (iii) சரி
D) (i) சரி, (ii), (iii) தவறு
E) விடை தெரியவில்லை

13. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான தொடரைத் தேர்வு செய்க

A) நலனைப் பிடித்திருந்த கலி நீங்கியது; நளனும் கலிப்படைந்தான்
B) நளனைப் பிடித்திருந்த கலி நீங்கியது; நளனும் களிப்படைந்தான்
C) நளனைப் பிடித்திருந்த களி நீங்கியது; நளனும் கலிப்படைந்தான்
D) நலனைப் பிடித்திருந்த களி நீங்கியது; நளனும் களிப்படைந்தான்
E) விடை தெரியவில்லை

14. சந்திப் பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

I. போரில் பல்லவரின் படை தோற்றது.
II. கணியன் எழுதியப் பாடல் நாளிதழில் வெளியானது.
III. ஆசிரியர் மாணவர்களைத் தேர்வு நன்றாக எழுதும்படிக் கூறினார்
IV. பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்.

**குறியீடுகள்:**

A) I மற்றும் II
B) I, II மற்றும் III
C) I மற்றும் IV சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

15. VIDEO JOCKEY – என்னும் கலைச்சொல்லிற்கான தமிழ் சொல்லைத் தேர்வு செய்க.

A) வானொலி வருணனையாளர்
B) காணொளி வருணனையாளர்
C) ஒளிப்பதிவாளர்
D) விளம்பரதாரர்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

16. **கூற்று 1** : எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துக்கள் ஆகும்.
**கூற்று 2** : எ, யா ஆகிய இரண்டும் மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துக்கள் ஆகும்.
**கூற்று 3** : 'ஆ' எனும் வினா எழுத்தானது, அழுத்தம் கொடுக்கவும் பயன்படுகிறது.
**குறியீடுகள்:**
A) கூற்று 1, 2 சரி, 3 தவறு
B) கூற்று 3, 2 சரி, 1 தவறு
C) கூற்று 1, 2 தவறு, 3 சரி
D) கூற்று 2, 3 தவறு, 1 சரி
E) விடை தெரியவில்லை

17. சரியான எதிர்மறைச் சொல்லைக் கண்டறிக
"கோவலன் கள்வன் ____________" என கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்தாள்.
A) அல்லள்
B) அல்லன்
C) அல்லர்
D) அல்லேன்
E) விடை தெரியவில்லை

18. **கூற்று** : இந்திய நாடு 'மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது' என்று குமரிலப்பட்டர் குறிப்பிட்டுள்ளார்.
**காரணம்** : இந்தியாவில் 1300க்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றை ஐந்து மொழிக் குடும்பங்களாக பிரிக்கலாம்.
**குறியீடுகள்:**
A) கூற்று சரி; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

19. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து தவறான தொடரைத் தேர்வு செய்க.
I. விளைச்சல் மிகுதியால் விலை குறைந்தது.
II. பனையிலிருந்து கல் உற்பத்தி செய்யப்படுகிறது.
III. அம்மா விளிக்கும் குரல் கேட்டு கண்ணன் விழித்தான்.
IV. மழையின்போது மின்னலின் ஒளி தெரியும் பின்னர் இடியின் ஒலி கேட்கும்.
**குறியீடுகள்:**
A) II மட்டும்
B) III மட்டும்
C) IV மட்டும்
D) I மட்டும்
E) விடை தெரியவில்லை

20. ஒருமை பன்மை பிழையற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.
(i) திருடர் பிடிபட்டனர்
(ii) தோட்டத்தில் பூக்கள் மலர்ந்திருந்தது
(iii) புலவர் அவைக்கு வந்தார்கள்
**குறியீடுகள்:**
A) (i) சரி, (ii) சரி, (iii) தவறு
B) (i) சரி, (ii) தவறு, (iii) சரி
C) (i) சரி, (ii) தவறு, (iii) தவறு
D) (i) தவறு, (ii) சரி, (iii) சரி
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

21. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்வு செய்க.
ஆணை – ஆனை
A) உத்தரவு – தீர்ப்பு
B) யானை – கட்டளை
C) ஒரு வகை மீன் – கட்டளை
D) உத்தரவு – யானை
E) விடை தெரியவில்லை

22. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைக் கண்டறிக.
அர்ஜுனன் எதிரியை நோக்கி __________ எய்தான்.
A) கனை
B) கணை
C) கரை
D) கறை
E) விடை தெரியவில்லை

23. பொருத்துக.
a) அரண் 1. பட்டாசு
b) அரன் 2. நீர் உணவு
c) பானம் 3. சிவன்
d) பாணம் 4. மதில்
**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

E) விடை தெரியவில்லை

24. **கூற்று 1** : வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்.
**கூற்று 2** : எது, யார், ஏன் ஆகியன புறவினாக்கள் ஆகும்.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
D) இரு கூற்றுகளும் தவறு
E) விடை தெரியவில்லை

25. சரியான வாக்கியத்தைக் கண்டறிக.
I. காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்ல.
II. நிலத்தின் உரிமையாளர் நீவீர் அல்லை.
III. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் அல்லள்
IV. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லர்
**குறியீடுகள்:**
A) I மற்றும் II சரி
B) I, II மற்றும் III சரி
C) II, III, IV சரி
D) III மற்றும் IV சரி
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

26. இடம் வகை அறிந்து பொருந்தாச் சொல்லை எழுதுக.

A) தன்னை  B) தன்னால்

C) தாம்  D) தனது

E) விடை தெரியவில்லை

27. **கூற்று** : தலைமை ஆசிரியர் மாணவர்களுக்குத் தமது கையால் பரிசு வழங்கினார்.

**காரணம்** : இங்கு தலைமை ஆசிரியர் என்பது மரியாதைப் பன்மை ஆகும். ஆகையால் 'தமது' என்னும் பன்மை பெற்று வந்துள்ளது.

**குறியீடுகள்:**

A) கூற்று சரி; காரணம் சரி

B) கூற்று சரி; காரணம் தவறு

C) கூற்று தவறு; காரணம் சரி

D) கூற்று தவறு; காரணம் தவறு

E) விடை தெரியவில்லை

28. தவறான இணையைத் தேர்வு செய்க

(i) MASS MEDIA – பல்லூடகம்

(ii) COLLOCATION – இணைப்பிடைச் சொற்கள்

(iii) ANTENNA – ஒலிவாங்கி

**குறியீடுகள்:**

A) (i) சரி, (ii) சரி, (iii) தவறு  B) (i) சரி, (ii) தவறு, (iii) சரி

C) (i) சரி, (ii) தவறு, (iii) தவறு  D) (i) தவறு, (ii) தவறு, (iii) சரி

E) விடை தெரியவில்லை

29. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக

கோவலன் கொலையுண்டான்

A) செய்வினை வாக்கியம்

B) செயப்பாட்டுவினை வாக்கியம்

C) எதிர்மறை வாக்கியம்

D) உடன்பாட்டுவினை வாக்கியம்

E) விடை தெரியவில்லை

30. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக

I. துணி – துணிவு

II. துனி – அச்சம்

III. திண்மை – தீமை

IV. தின்மை – வலிமை

**குறியீடுகள்:**

A) I மற்றும் II  B) II மற்றும் III

C) II மற்றும் IV  D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

31. செய்வினை வாக்கியத்தைக் கண்டறிக

I. வீடு கட்டியாயிற்று

II. ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்

III. பணம் காணாமல் போனது

IV. கணியன் நாடகம் நடித்தான்

**குறியீடுகள்:**

A) I மற்றும் II
B) II மற்றும் III
C) II மற்றும் IV
D) I மற்றும் III
E) விடை தெரியவில்லை

32. செயப்படுபொருள் வேற்றுமை என அழைக்கப்படுவது ___________

A) இரண்டாம் வேற்றுமை
B) மூன்றாம் வேற்றுமை
C) ஆறாம் வேற்றுமை
D) ஏழாம் வேற்றுமை
E) விடை தெரியவில்லை

33. தவறான இணையைத் தேர்வு செய்க

(1) உழவர் நிலத்தை உழுதார் – தன்வினை வாக்கியம்

(2) கவிதா ராமனைத் திருத்தினாள் – பிறவினை வாக்கியம்

(3) சட்டி உடைந்து போயிற்று – செய்வினை வாக்கியம்

(4) அவள் கண்ணகி – பெயர்ப் பயனிலைத் தொடர்

**குறியீடுகள்:**

A) (1), (2) மற்றும் (4)
B) (1) மற்றும் (4)
C) (1), (3) மற்றும் (4)
D) (3) மட்டும்
E) விடை தெரியவில்லை

34. **கூற்று** : தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார் - பிறவினை வாக்கியம்

**காரணம்** : இங்கு 'தந்தை' எனும் எழுவாய் ஒரு வினையைச் செய்துள்ளது

**குறியீடுகள்:**

A) கூற்று சரி; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

35. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க

**(கண்ணெழுத்து)**

A) கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் ___________ ஆகும்.
B) நேர்கோடு,வரைகோடு கொண்டு வரையப்பட்ட ஓவியங்கள் ___________ ஆகும்.
C) வண்ணங்கள் குழப்பும் பலகை ___________ ஆகும்.
D) கரித்துண்டுகளால் வரையப்படும் ஓவியம் ___________ ஆகும்.
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

36. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் – அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்வு செய்க.
A) செல்வந்தர் B) வறுமையுற்றவர்
C) நன்மொழி பேசுபவர் D) பொய்யுரைப்பவர்
E) விடை தெரியவில்லை

37. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க
I. நான் அல்லன்
II. அவை அன்று
III. நீ அல்லீர்
IV. நாம் அல்லோம்
**குறியீடுகள்:**
A) II மட்டும் B) I மட்டும்
C) IV மட்டும் D) III மட்டும்
E) விடை தெரியவில்லை

38. பின்வரும் இணைகளைக் கருத்தில் கொள்க
(i) Every fox must at last pay his skin to the flaye – இனம் இனத்தோடு சேரும்
(ii) One doth the scathe, another hath the blow – தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?
(iii) Misfortune never comes single – பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்
**குறியீடுகள்:**
A) (i) சரி, (ii) சரி, (iii) தவறு B) (i) தவறு, (ii) தவறு, (iii) சரி
C) (i) சரி, (ii) தவறு, (iii) தவறு D) தவறு, (ii) சரி, (iii) சரி
E) விடை தெரியவில்லை

39. ஒரு பொருள் தரும் பல சொற்களைக் கருத்தில் கொள்க
அசுவம், துரகம், மா
A) குதிரை B) கரடி
C) மான் D) சிங்கம்
E) விடை தெரியவில்லை

40. பொருத்துக:
a) PSYCHOANALYTICISM 1. மிகை நடப்பியல்
b) SURREALISM 2. அறிவுறுத்தல்
c) ARCHETYPALISM 3. உளவியல்
d) DIDACTICISM 4. தொல்படிமவியல்
**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

41. ‘Bad words find bad acceptance’ – எனும் ஆங்கில பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழியைத் தேர்வு செய்க
A) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
B) நுணலும் தன் வாயாற் கெடும்
C) புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்
D) மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை
E) விடை தெரியவில்லை

42. பின்வரும் இணைகளைக் கருத்தில் கொள்க
(i) கனம் – நேரம்
(ii) வயல் – கமம்
(iii) பாம்பு – பனி
**குறியீடுகள்:**
A) (i) தவறு, (ii) சரி, (iii) தவறு
B) (i) சரி, (ii) தவறு, (iii) சரி
C) (i) சரி, (ii) தவறு, (iii) தவறு
D) (i) தவறு, (ii) சரி, (iii) சரி
E) விடை தெரியவில்லை

43. **கூற்று** : வளவனா அப்படிச் செய்தது? – இங்கு ‘வளவனா’ என்பது புறவினா ஆகும்.
**காரணம்** : ‘ஆ’ எனும் வினா எழுத்து சொல்லின் புறத்தே இருந்து வினாப் பொருளைத் தருகிறது. மேலும் இவ்வினா எழுத்தை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
**குறியீடுகள்:**
A) கூற்று சரி; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

44. ஒலி வேறுபாடு அறிந்து பிழையான தொடரைக் கண்டறிக
A) ஒன்றே குலம் ஒருவனே தேவன்
B) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
C) வெள்ளிக் கின்னம் விலை அதிகம்
D) இன்று பனிப்பொழிவு மிகுதியாக உள்ளது
E) விடை தெரியவில்லை

45. BLOGSPOT – என்னும் கலைச் சொல்லிற்கான தமிழ்ச் சொல்லைத் தேர்வு செய்க
A) வலைப்பூ
B) வலைப்பின்னல்
C) அலைத்தொகுப்பு
D) போலிக் குறியீடு
E) விடை தெரியவில்லை

46. பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.
I. கன்று தனது தலையை ஆட்டியது.
II. சிறுவர்கள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தனர்.
III. கண்ணன் தமது தந்தையுடன் சென்றான்.
IV. தாம் நாளை வருவதாக வளவன் கூறினான்.
**குறியீடுகள்:**
A) I மற்றும் II
B) I, II மற்றும் III
C) I, II, IV சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

47. இரு பொருள் தரும் ஒரு சொல்லில் பொருந்தா இணையைத் தேர்வு செய்க
A) திங்கள் – ஆதவன், மாதம்
B) வலி – வலிமை, நோவு
C) மறை – வேதம், மறைத்து வை
D) திரை – கடல் அலை, திரைச்சீலை
E) விடை தெரியவில்லை

48. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(இணுக்கு)
A) கீரை, வாழை முதலியவற்றின் அடி __________ என்பர்.
B) குச்சியின் பிரிவு __________ என்பர்.
C) காய்ந்த இலை __________ என்பர்.
D) நெல், புல் முதலியவற்றின் கொழுந்து __________ என்பர்.
E) விடை தெரியவில்லை

49. ‘அரம்பை’ என்பதன் பொருளைத் தேர்வு செய்க.
A) அத்தி
B) கூர்மை
C) வாழை
D) மலர்
E) விடை தெரியவில்லை

**கீழ்காணும் பத்தியைப் படித்து விடையளிக்க (50–54)**

குறிஞ்சி நில மக்களாகிய குறவர்கள், மலை கிழவோனாகிய முருகனுக்குத் தேனும், தினையும் படைத்தனர். வெறியாடி விழாக் கொண்டாடினர். குறத்தியர் குன்றக்குரவையாடினர். முல்லை நில மக்களாகிய ஆயர் அவர்களது உணவாகிய பால், தயிர், வெண்ணெய் ஆகியனவற்றை மாயோனுக்குப் படைப்பர். தமக்குத் துன்பம் வந்த காலத்து ஆயர் குல மகளிர் தம்முள் கைகோத்துக் குரவைக் கூத்தாடுவர். பாலை நில மக்கள் கொற்றவையை வழிபட்டனர். ‘கொற்றி’என இவளைக் குறிப்பிட்டுக் கையில் காப்புக் கட்டி நோன்பிருந்து வழிபட்டனர். மருத நில மக்கள் இந்திரனை வழிபட்டனர். இந்திர வழிபாடு சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விரிவாகப் பேசப் பெற்றுள்ளது.இருபத்தெட்டு நாட்கள் நிகழ்வுறும் இவ்விழாவினை இந்திர விழா என்றே அந்நூல்கள் குறிப்பிட்டுச் சிறப்பிக்கின்றன. நெய்தல் நிலக் கடவுளாக வருணன் கூறப் பெறினும் அந்நிலத்து மக்கள் தனிப்பட அக்கடவுளை வழிபடவில்லையெனலாம். தமக்கு வாழ்வளிக்கும் கடலினை வழிபட்டனர். உவா நாளில் சுறா மீனின் கொம்பினைத் தெய்வமாக வழிபட்டுப் படையலிட்டு மகிழ்ந்தனர்.

50. முல்லை நில மக்களின் உணவுகளில் பொருந்தாதைத் தேர்வு செய்க
A) தினை
B) பால்
C) தயிர்
D) வெண்ணெய்
E) விடை தெரியவில்லை

51. இந்திர வழிபாடு குறித்து குறிப்பிடும் நூல்கள் எவை?
A) குண்டலகேசி
B) சிலப்பதிகாரம்
C) மணிமேகலை
D) B & C
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

52. பாலை நிலத்தின் கடவுள் ____________.

A) முருகன் B) கொற்றவை
C) இந்திரன் D) வருணன்
E) விடை தெரியவில்லை

53. குரவைக் கூத்து எந்நிலத்திற்குரிய கருப்பொருள்?

A) குறிஞ்சி B) மருதம்
C) முல்லை D) நெய்தல்
E) விடை தெரியவில்லை

54. இந்திர விழா எத்தனை நாட்கள் நடைபெறும்?

A) உஅ B) ஙரு
C) கஎ D) க௦
E) விடை தெரியவில்லை

55. கீழ்காணும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.

(i) வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து அது மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என முதன்முதலில் குறிப்பிட்டார்
(ii) பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு. கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்றார்
(iii) இவற்றிற்கு தென்னிந்திய மொழிகள் என்று ஹோக்கன் பெயரிட்டார்

**குறியீடுகள்**:

A) கூற்று (i), (ii), (iii) தவறு B) கூற்று (i), (ii) சரி, (iii) தவறு
C) கூற்று (i), (ii), (iii) சரி D) கூற்று (i) சரி, (ii), (iii) தவறு
E) விடை தெரியவில்லை

56. ஹீராஸ் பாதிரியார் கூற்றுப்படி சரியான மொழிமாற்ற வரிசையைத் தேர்வு செய்க.

A) தமிழ் → தமிலா → தமிழா → டிரமிலா → த்ராவிடா → திராவிடா
B) தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → த்ராவிடா → திராவிடா
C) தமிழ் → தமிழா → டிரமிலா → தமிலா → த்ராவிடா → திராவிடா
D) தமிழ் → தமிலா → தமிழா → த்ராவிடா → டிரமிலா → திராவிடா
E) விடை தெரியவில்லை

57. கீழ்காணும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.

**கூற்று 1** : மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது
**கூற்று 2** : இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ்மொழி ஆட்சி மொழியாக உள்ளது

**குறியீடுகள்**:

A) கூற்று 1 மட்டும் சரி B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி D) இரு கூற்றுகளும் தவறு
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

58. சரியான இணையைத் தேர்வு செய்க.

(i) தென்திராவிட மொழி – துளு

(ii) நடுத்திராவிட மொழி – கொரகா

(iii) வட திராவிட மொழி – பிராகுய்

**குறியீடுகள்:**

A) (i) சரி (ii) சரி (iii) தவறு

B) (i) சரி (ii) தவறு (iii) சரி

C) (i) சரி (ii) தவறு (iii) தவறு

D) (i) தவறு (ii) சரி (iii) சரி

E) விடை தெரியவில்லை

59. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகளைக் கருத்தில் கொள்க.

(i) பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கின்றன

(ii) திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன

(iii) திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது

(iv) திராவிட மொழிகளில் வினைச்சொல் காலத்தை மட்டும் காட்டும்

**குறியீடுகள்:**

A) (i), (ii), (iv) சரி (iii) தவறு

B) (i) தவறு (ii), (iii), (iv) சரி

C) (i), (ii), (iii) சரி (iv) தவறு

D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

60. சரியானதைக் கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| (i) | மந்தி | – | ஆண் குரங்கு |
| (ii) | கடுவன் | – | பெண்குரங்கு |
| (iii) | களிறு | – | ஆண் யானை |
| (iv) | பிடி | – | பெண்யானை |

**குறியீடுகள்:**

A) (i) மற்றும் (ii) சரி

B) (ii) மற்றும் (iii) சரி

C) (iii) மற்றும் (iv) சரி

D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

61. பொருத்துக

| | |
|---|---|
| a) முதல் உலகத்தமிழ் மாநாடு | 1. மலேசியா |
| b) இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு | 2. பிரான்சு |
| c) மூன்றாம் உலகத்தமிழ் மாநாடு | 3. மதுரை |
| d) ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு | 4. சென்னை |

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

62. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்' – என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடியவர் யார்?
A) கண்ணதாசன்
B) தமிழன்பன்
C) பாரதியார்
D) பாரதிதாசன்
E) விடை தெரியவில்லை

63. 'தமிழ்' என்னும் சொல் முதன்முதலில் ஆளப்படும் இலக்கியத்தைத் தேர்வு செய்க.
A) தேவாரம்
B) தொல்காப்பியம்
C) சிலப்பதிகாரம்
D) நன்னூல்
E) விடை தெரியவில்லை

64. பிரித்து எழுதுக: பாகற்காய்
A) பாகு + காய்
B) பாகற் + காய்
C) பாகு + அல்காய்
D) பாகு + அல் + காய்
E) விடை தெரியவில்லை

65. கீழ்கண்டவற்றுள் தவறானதைத் தேர்வு செய்க.
(I) ஆல் இலை
(II) பனைத்தாள்
(III) கரும்புத்தோகை
(IV) பாக்கு கூந்தல்
**குறியீடுகள்:**
A) (IV) மட்டும்
B) (III) மட்டும்
C) (II) மட்டும்
D) (I) மட்டும்
E) விடை தெரியவில்லை

66. பொருந்தா இணையைத் தேர்வு செய்க.
(i) "வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி" – பரிதிமாற்கலைஞர்
(ii) என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய் – பாரதியார்
**குறியீடுகள்:**
A) (i) மட்டும்
B) (ii) மட்டும்
C) (i) மற்றும் (ii)
D) இரண்டுமில்லை
E) விடை தெரியவில்லை

67. தமிழர்கள் குடியரசுத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடுகள் ________
A) இலங்கை, சிங்கப்பூர்
B) மலேசியா, சிங்கப்பூர்
C) சிங்கப்பூர், மொரிசியசு
D) இலங்கை, மலேசியா
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

68. கடற்பயணத்தை முந்நீர் வழக்கம் எனக் குறிப்பிடும் நூல் எது?

A) அகநானூறு
B) தொல்காப்பியம்
C) புறநானூறு
D) பட்டினப்பாலை
E) விடை தெரியவில்லை

69. தமிழின் தனித்தன்மைகள் தொடர்பான கூற்றுகளைக் கருத்தில் கொள்க

(i) தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் தன்மையுடையது
(ii) பல நாடுகளில் பேசப்படும் பெருமையுடையது
(iii) ஆனால் இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் சில மட்டுமே தமிழில் அமைந்துள்ளன

**குறியீடுகள்:**

A) கூற்று (i), (ii), (iii) தவறு
B) கூற்று (i), (ii) சரி, (iii) தவறு
C) கூற்று (i), (ii), (iii) சரி
D) கூற்று (i) சரி, (ii), (iii) தவறு
E) விடை தெரியவில்லை

70. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a) ஃகன் | 1. தோடா |
| b) கொண் | 2. கன்னடம் |
| c) மூடு | 3. குரூக் |
| d) மூரு | 4. தெலுங்கு |

**குறியீடுகள்:**

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

71. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

(i) சங்க இலக்கியம் 26,350 அடிகளைக் கொண்டுள்ளது
(ii) தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் மாக்சுமுல்லர்
(iii) தமிழ் மொழி ஐந்நூறு ஒலிகளைக் கொண்டுள்ளது
(iv) ‘இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது’ என்பார் முனைவர் எமினோ

**குறியீடுகள்:**

A) (i), (ii), (iv) சரி (iii) தவறு
B) (i) தவறு (ii), (iii), (iv) சரி
C) (i), (ii), (iii) சரி (iv) தவறு
D) (i),(iii),(iv) சரி (ii) தவறு
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

72. உலகம் உருண்டையானது எனும் அறிவியல் உண்மையை உணர்த்தும் குறட்பாவைத் தேர்வு செய்க

A) சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

B) தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்

C) உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

D) இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

E) விடை தெரியவில்லை

73. தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது என்று கூறியவர்?

A) மாக்சு முல்லர்
B) ஹோக்கன்
C) கிரௌல்
D) கால்டுவெல்
E) விடை தெரியவில்லை

74. 'மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்' – இவ்வடி இடம்பெற்றுள்ள நூலைத் தேர்வு செய்க

A) புறப்பொருள் வெண்பாமாலை
B) தண்டியலங்காரம்
C) தொல்காப்பியம்
D) அகநானூறு
E) விடை தெரியவில்லை

75. தமிழில் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் எது?

A) நன்னூல்
B) தொல்காப்பியம்
C) புறப்பொருள் வெண்பாமாலை
D) நேமிநாதம்
E) விடை தெரியவில்லை

76. கீழ்கண்ட தொடர்களைக் கவனி

**கூற்று 1** : பதினொரு செம்மொழித் தகுதிக் கோட்பாடுகளை வரையறுத்தவர் அறிவியல் தமிழறிஞர் முஸ்தபா

**கூற்று 2** : பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி எனக் கூறியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**கூற்று 3** : நடுவணரசு தமிழைச் செம்மொழியாக 2005 ஆம் ஆண்டு அறிவித்தது

**குறியீடுகள்:**

A) கூற்று 1, 2 சரி, 3 தவறு
B) கூற்று 3, 2 சரி, 1 தவறு
C) கூற்று 1, 2 தவறு, 3 சரி
D) கூற்று 2, 3 தவறு, 1 சரி
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

77. சரியான இணையைத் தேர்வு செய்க

| **(உலகத்தமிழ் மாநாடுகள்)** | | **(ஆண்டு)** | | **(இடம்)** |
|---|---|---|---|---|
| (I) ஆறாம் உலகத்தமிழ் மாநாடு | – | 1987 | – | கோலாலம்பூர் |
| (II) நான்காம் உலகத்தமிழ் மாநாடு | – | 1974 | – | யாழ்ப்பாணம் |
| (III) ஒன்பதாம் உலகத்தமிழ் மாநாடு | – | 1995 | – | தஞ்சாவூர் |
| (IV) பத்தாம் உலகத்தமிழ் மாநாடு | – | 2015 | – | கோலாலம்பூர் |

**குறியீடுகள்:**

A) (I) மற்றும் (II) சரி
B) (II) மற்றும் (III) சரி
C) (III) மற்றும் (IV) சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

78. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

**கூற்று 1 :** தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன

**கூற்று 2 :** அரச்சலூர் கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

**குறியீடுகள்:**

A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
D) இரு கூற்றுகளும் தவறு
E) விடை தெரியவில்லை

79. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

**கூற்று 1 :** தமிழ்வேலி என்ற பரிபாடல் அடிகள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தினைக் குறிக்கின்றது

**கூற்று 2 :** இசை இலக்கண நூல் இருந்திருப்பதை நரம்பின் மறை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது

**கூற்று 3 :** 'பண்ணொடு தமிழொப்பாய்' என்கிறது திருவாசகம்

**குறியீடுகள்:**

A) கூற்று 1, 2 சரி, 3 தவறு
B) கூற்று 3, 2 சரி, 1 தவறு
C) கூற்று 1, 2 தவறு, 3 சரி
D) கூற்று 2, 3 தவறு, 1 சரி
E) விடை தெரியவில்லை

80. குழிமாற்று என்று குறிப்பிடப்படுவது ___________

A) பின்ன எண்ணின் கீழ்த்தொகை
B) பின்ன எண்ணின் மேல்தொகை
C) பெருக்கல் வாய்ப்பாடு
D) கூட்டல் வாய்ப்பாடு
E) விடை தெரியவில்லை

81. திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவியவர யார்?

A) கால்டுவெல்
B) பரிதிமாற்கலைஞர்
C) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
D) தேவநேயப் பாவாணர்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

82. உ.வே.சா குறித்த பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க
(i) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் அவர்களின் மாணவர்
(ii) உ.வே.சா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் என் சரிதம் ஆகும்
(ii) அவரது நினைவாக டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் சென்னையில் உள்ள பெரம்பூரில் நிறுவப்பட்டுள்ளது
**குறியீடுகள்:**
A) (i) சரி (ii) சரி (iii) தவறு
B) (i) சரி (ii) தவறு (iii) சரி
C) (i) சரி (ii) தவறு (iii) தவறு
D) (i) தவறு (ii) சரி (iii) சரி
E) விடை தெரியவில்லை

83. கீழ்கண்ட தொடர்களைக் கருத்தில் கொள்க.
**கூற்று** : இலெமுரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்
**காரணம்** : முதல் மாந்தன் தோன்றிய இடம் இலெமுரியா என்று அறிஞர்கள் கருதுகின்றனர்
A) கூற்று சரி; காரணம் தவறு
B) கூற்று மற்றும் காரணம் சரி.காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
E) விடை தெரியவில்லை

84. கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு பற்றிய கூற்றுகளில் சரியானதைக் கண்டறிக.
(I) மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை
(II) எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை
(III) 'ஸ' எனும் வடமொழி எழுத்து காணப்படவில்லை
**குறியீடுகள்:**
A) (I) மற்றும் (II) சரி
B) (II) மற்றும் (III) சரி
C) (I) மற்றும் (III)சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

85. மன்னிப்பு என்பது எம்மொழிச் சொல்
A) அரபு
B) உருது
C) சமஸ்கிருதம்
D) பிரெஞ்சு
E) விடை தெரியவில்லை

86. சரியான இணையைத் தேர்வு செய்க
(I) SOUND TEXTURE – ஒலிப்பின்னல்
(II) MATRILOCAL – தாய் முறை
(III) TRANSFORM – மறித்தாக்கம்
(IV) NEOLOCAL – தன்மனை
**குறியீடுகள்:**
A) (I) மற்றும் (II) சரி
B) (I), (II) மற்றும் (III) சரி
C) (I), (II), (IV) சரி
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

87. பல பொருள் தரும் ஒரு சொல்லைத் தேர்வு செய்க
ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி
A) கப்பல்
B) கடற்பயணம்
C) கடல்
D) மாலுமி
E) விடை தெரியவில்லை

88. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ் சொல் காண்க
(i) உபாத்தியாயர் – ஆசிரியர்
(ii) வித்தியாப்பியாசம் – கல்வித் தொடக்கம்
(iii) சீதாள பத்திரம் – தாழை மடல்
**குறியீடுகள்:**
A) (i) சரி (ii) சரி (iii) தவறு
B) (i) சரி (ii) தவறு (iii) சரி
C) (i) சரி (ii) தவறு (iii) தவறு
D) (i) தவறு (ii) சரி (iii) சரி
E) விடை தெரியவில்லை

89. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க
(சுள்ளி)
A) __________ என்பது காய்ந்த குச்சு
B) _____________ என்பது காய்ந்த சிறுகிளை
C) _____________ என்பது காய்ந்த கழி
D) ___________ என்பது காய்ந்த கொம்பும் கவையும் அடியுமாகும்.
E) விடை தெரியவில்லை

**கீழ்காணும் பத்தியைப் படித்து விடையளிக்க (90–92):**
இசைக்கருவிகள் தோல் கருவி, நரம்புக் கருவி, காற்றுக் கருவி, கஞ்சக் கருவி என நான்கு வகைப்படும். விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல் கருவிகள் எனப்படும். நரம்பு அல்லது தந்திகளை உடையவை நரம்புக் கருவிகள் எனப்படும். காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக் கருவிகள் எனப்படும். ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக் கருவிகள் எனப்படும்.

90. இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்?
A) நான்கு
B) இரண்டு
C) மூன்று
D) ஒன்று
E) விடை தெரியவில்லை

91. நரம்புக் கருவிகள் ___________
A) தோலால் மூடப்பட்ட கருவி
B) தந்திகளை உடையவை
C) காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை
D) ஒன்றோடு ஒன்று மோதி கொள்பவை
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

92. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை __________
A) நரம்புக் கருவிகள்
B) தோல் கருவிகள்
C) கஞ்சக் கருவிகள்
D) காற்றுக் கருவிகள்
E) விடை தெரியவில்லை

93. தவறான இணையைத் தேர்வு செய்க
(I) கவ்வை – எள்பிஞ்சு
(II) நுழாய் – வாழைப்பிஞ்சு
(III) கச்சல் – இளநெல்
(IV) குரும்பை – பனையின் இளம் பிஞ்சு
A) (I) மற்றும் (II)
B) (II) மற்றும் (III)
C) (I) மற்றும் (III)
D) (I) மற்றும் (IV)
E) விடை தெரியவில்லை

94. தாவரங்களை அவற்றின் இளம் பயிர் வகைகளுடன் பொருத்துக
a) பனை 1. குருத்து
b) விளா 2. வடலி
c) வாழை 3. பைங்கூழ்
d) சோளம் 4. குட்டி

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

95. பாவாணரின் தமிழ் சொல்லாக்கத்தில் சரியாகப் பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
(1) புரூட்சாலட் – பழரசம்
(2) ஐஸ்கிரீம் – பனிக்கூழ்
(3) ஜாதகம் – பிறப்பியம்
(4) பஞ்சாங்கம் – ஐந்திறம்

**குறியீடுகள்:**
A) (1), (2), (4)
B) (2), (3), (4)
C) (1), (2), (3)
D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

96. தமிழில் சொற்றொகை, தொகுப்பு அகராதி, தொகையகராதி, தமிழ்ப்பா அகராதி, தொகுதி, கூட்டம் எனப் பல பொருள்கள் தரும் நிகண்டு என்பது எம்மொழிச் சொல்?
A) வடமொழி
B) அரபு
C) உருது
D) பாரசீகம்
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

97. மனை என்பதன் பொருளைத் தேர்வு செய்க

A) உட்காரும் பலகை
B) பெண் நாரை
C) குடும்பத் தலைவன்
D) மலை
E) விடை தெரியவில்லை

98. சேர்த்து எழுதுக: காடு + அகம்

A) காடகம்
B) காடுஅகம்
C) காட்டகம்
D) காடுகம்
E) விடை தெரியவில்லை

99. பிரித்து எழுதுக: வேறல்

A) வேறு + அல்
B) வேல் + அல்
C) வேற் + அல்
D) வெல் + தல்
E) விடை தெரியவில்லை

100. சந்திப் பிழையுள்ள வாக்கியத்தைத் தேர்வு செய்க.

I. வீரமாமுனிவர் தமிழகம் வந்து தமிழ் கற்றார்
II. பாதையில் விழுந்த குதிரை காயமடைந்தது
III. அமைச்சர் தேர்தல் வாக்குறுதிகளை கூறியபடிச் செய்தார்

A) III மட்டும்
B) II மட்டும்
C) I மற்றும் II மட்டும்
D) II மற்றும் III மட்டும்
E) விடை தெரியவில்லை

101. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.

**கூற்று 1** : வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது
**கூற்று 2** : அல்வழிபுணர்ச்சியில் வல்லினம் மிகும்
**கூற்று 3** : விளித் தொடர்களில் வல்லினம் மிகாது

**குறியீடுகள்:**

A) கூற்று 1, 2 சரி, கூற்று 3 தவறு
B) கூற்று 1, 3 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1, 2 தவறு, கூற்று 3 சரி
D) கூற்று 2, 3 தவறு, கூற்று 1 சரி
E) விடை தெரியவில்லை

102. பாணம் என்பதன் பொருளைத் தேர்வு செய்க.

A) அம்பு
B) குளிர்பானம்
C) கள்
D) படை
E) விடை தெரியவில்லை

103. பிழையைத் திருத்தி எழுதுக

அங்கு இருப்பது மான் அல்ல

A) அல்லை
B) அல்லீர்
C) அல்லள்
D) அன்று
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

104. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.

**கூற்று 1** : திரிசொல் என்பது கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் எளிதில் பொருள் விளங்கக் கூடியது ஆகும்

**கூற்று 2** : இது பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்

**குறியீடுகள்:**

A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
D) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு
E) விடை தெரியவில்லை

105. கோடிட்ட இடத்தில் சரியான எதிர்மறைச் சொல்லைத் தேர்வு செய்க.

ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன ___________.

A) அன்று
B) அல்ல
C) அல்லை
D) அல்லோம்
E) விடை தெரியவில்லை

106. தவறான இணையைத் தேர்வு செய்க.

I. வீடியோகேசட் – ஒளிஇழை
II. விஞ்ஞானம் – அறிவியல்
III. விநாடி – நொடி
IV. நாள்தோறும் – தினசரி

**குறியீடுகள்:**

A) I மற்றும் II
B) II மற்றும் III
C) II மற்றும் IV
D) I மற்றும் IV
E) விடை தெரியவில்லை

107. ஒருமைப் பன்மை பிழையற்ற தொடரை தேர்வு செய்க.

A) இலையுதிர் காலத்தில் மரங்கள் இலைகளை உதிர்க்கின்றது
B) இந்த ஆறுகள் மிகவும் நீளமானது.
C) பழமையான நூல்கள் வரலாற்றை எடுத்துக் காட்டுகிறது
D) மரத்தின் கிளைகளில் பறவைகள் அமர்ந்திருந்தன
E) விடை தெரியவில்லை

108. ஒரு பொருள் குறித்த பல சொற்களில் பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

I. கிள்ளை
II. சுகம்
III. பீலி
IV. தத்தை

**குறியீடுகள்:**

A) IV
B) III
C) I
D) II
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

109. பின்வரும் தொடர்களைக் கருத்தில் கொள்க.

**கூற்று** : நல்குரவு என்பது பெயர்த் திரிசொல் ஆகும்

**காரணம்** : இதன் பொருள் கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியதாக அமைந்துள்ளது

A) கூற்று சரி; காரணம் தவறு

B) கூற்று மற்றும் காரணம் சரி.காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

C) கூற்று தவறு; காரணம் சரி

D) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

E) விடை தெரியவில்லை

110. புனல் நாடு என அழைக்கப்படுவது

A) தென்பாண்டி நாடு
B) கற்கா நாடு
C) அருவா நாடு
D) சோழ நாடு
E) விடை தெரியவில்லை

111. கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதை ____________ என்பர்.

A) தற்சமம்
B) தற்பவம்
C) திசைச்சொல்
D) இயற்சொல்
E) விடை தெரியவில்லை

112. பின்வருவனவற்றுள் சரியான இணைகளைக் கண்டறிக.

A) பூ – பூக்கள்

B) மாணவன் – மாணவர்

C) தான் – தனது

D) நூல் – நூற்கள்

A) (A), (B)
B) (C), (D)
C) (A), (C)
D) (B), (D)
E) விடை தெரியவில்லை

113. பின்வருவனவற்றுள் திரிசொல் பயின்று வந்துள்ள தொடரைத் தேர்வு செய்க.

I. சிங்கத்தின் எயிறு கூர்மையாக இருக்கும்

II. மடி இன்மை ஒருவரை வாழ்வின் முன்னேற்ற பாதைக்கு இட்டுச் செல்லும்

III. அம்மா குழந்தையை விளித்தார்

IV. அனுமன் சீதையைப் பார்த்தார்

**குறியீடுகள்:**

A) I மற்றும் II
B) I, II மற்றும் III
C) I, II மற்றும் IV
D) மேற்கண்ட அனைத்தும்
E) விடை தெரியவில்லை

114. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A) வேலன்
B) மரம்
C) நாய்
D) காற்று
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

115. பொருத்துக.

a) அன், ஆன் — 1. பலவின்பால் வினைமுற்று விகுதி
b) அ, ஆ — 2. ஆண்பால் வினைமுற்று விகுதி
c) அ, உம் — 3. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
d) எம், ஏம் — 4. பெயரெச்ச விகுதிகள்

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

116. தவறான இணையைத் தேர்வு செய்க.

A) பகுதி – வினைச்சொல்லில் ஏவலாக அமையும்
B) இடைநிலை – காலம் காட்டும்
C) சந்தி – பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்
D) சாரியை – பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும்
E) விடை தெரியவில்லை

117. கூற்று காரணம் சரியா? தவறா?

**கூற்று** : சன்னல் என்பது திசைச்சொல் ஆகும்
**காரணம்** : போர்ச்சுக்கீசிய மொழியிலிருந்து வந்து தமிழில் வழங்கி வருகிறது

**குறியீடுகள்:**

A) கூற்று சரி; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

118. தவறான இணையைத் தேர்வு செய்க.

A) மலை – மலைகள்
B) நாடு – நாடுகள்
C) அணி – அணிகள்
D) நாள் – நாட்கள்
E) விடை தெரியவில்லை

119. பிறமொழி கலவாத தொடரைத் தேர்வு செய்க.

A) மாணவர்கள் விளையாட்டுப் போட்டியில் உற்சாகமாக கலந்து கொண்டனர்
B) ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் சரியாக பதிலளித்தனர்
C) நாட்டின் புதிய அதிபர் பல மாற்றங்களை கொண்டு வந்தார்
D) நெஞ்சில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்கலாம்
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

120. வா என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம் காண்க.
A) வந்தான் B) வந்த
C) வந்து D) வருக
E) விடை தெரியவில்லை

121. எதிர்ச்சொல்லைத் தேர்வு செய்க: உழிஞை
A) நொச்சி B) வெட்சி
C) வஞ்சி D) தும்பை
E) விடை தெரியவில்லை

122. கீழ்காணும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.
i) பகுதி விகுதி எனப் பிரிக்க முடியாத சொல் பகாப்பதம் எனப்படும்
ii) பகாப்பதம் இரண்டு வகைப்படும்
iii) இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்
A) கூற்று - (i), (ii), (iii) தவறு B) கூற்று - (i), (ii) சரி, (iii) தவறு
C) கூற்று - (i), (ii), (iii) சரி D) கூற்று - (i) சரி, (ii) தவறு (iii) சரி
E) விடை தெரியவில்லை

123. சரியான ஒன்றைத் தேர்வு செய்க.
A) ஆட்டுப்பாகன் B) பனங் குரும்பை
C) கீரிக் குஞ்சு D) பசுவின் குட்டி
E) விடை தெரியவில்லை

124. கூற்று காரணம் சரியா? தவறா?
**கூற்று** : பண்டிகை, இரயில் முதலியவை திசைச் சொற்கள் ஆகும்
**காரணம்** : வடமொழி உட்பட பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.
A) கூற்று சரி; காரணம் சரி B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி D) கூற்று தவறு; காரணம் தவறு
E) விடை தெரியவில்லை

125. மிகுதி என்னும் ஒரு பொருள் தரும் பல சொற்களில் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
A) தவ B) கழி
C) கொல் D) உறு
E) விடை தெரியவில்லை

126. பின்வருவனவற்றுள் சரியான இணைகளைத் தேர்வு செய்க.
A) கூர் – உரித் திரிசொல்
B) அன்ன – இடைத் திரிசொல்
C) அழுவம் – பெயர்த் திரிசொல்
D) இயம்பினான் – வினைத் திரிசொல்
A) (A), (B) B) (C) (D)
C) (A), (C) D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

127. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.
முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றுமில்லை. __________, தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை
A) இல்லையென்றால்
B) ஆனால்
C) அதனால்
D) அதுபோல
E) விடை தெரியவில்லை

128. பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.
A) மதுரைக்காஞ்சி
B) பதிற்றுப்பத்து
C) குறிஞ்சிப்பாட்டு
D) மலைபடுகடாம்
E) விடை தெரியவில்லை

129. பின்வரும் வட்டார வழக்கு சொற்களைப் பொருத்துக.
a) பாச்சல் — 1. பாத்தி
b) மகுளி — 2. அழுத்தம்
c) நீத்துப்பாகம் — 3. சோற்றுக்கஞ்சி
d) அலுக்கம் — 4. மேல்கஞ்சி

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

130. சரியான எழுத்து வழக்கு தொடரைத் தேர்வு செய்க.
I. மிகுந்த தொலவட்டலயிருந்து வருகிறேன்
II. பிஞ்சை நிலத்தில் சோளம் மற்றும் கேழ்வரகு பயிரிடப்படுகிறது
III. மாறன் வெள்ளங்காட்டியே எழுந்துட்டான்
IV. வளவன் ஒரு ஏழை எளியவன்

**குறியீடுகள்:**
A) I
B) II
C) III
D) IV
E) விடை தெரியவில்லை

131. பின்வரும் நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.
"தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி" என்று கவிஞர் கூறினார்
A) தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி என்று கவிஞர் கூறினார்
B) தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி
C) கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பியிடம் கூறினார்
D) தம்பி சங்கத் தமிழ் நூலைப் படித்தாயா எனக் கவிஞர் கேட்டார்
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

132. நம்பி எழிலிடம், "நானும் உனது கருத்தைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என்று கூறினான் – மேற்கண்ட நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போது அடிக்கோடிட்ட சொல் எவ்வாறு மாறும்?

A) தாம்
B) தாங்களும்
C) தானும்
D) எதுவுமில்லை
E) விடை தெரியவில்லை

133. எவ்வகைத் தொடர் எனக் கண்டறிக:–
இது நாற்காலி

A) வினா பயனிலைத் தொடர்
B) வினைப் பயனிலைத் தொடர்
C) பெயர்ப் பயனிலைத் தொடர்
D) வினாத் தொடர்
E) விடை தெரியவில்லை

134. அடைப்புக்குள் உள்ள இணைமொழிச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
(அல்லும் பகலும்)

A) விவசாயி தனது நிலத்தில் ______ உழைத்தார்
B) அவர் ________ வாழ்ந்தார்
C) மாறன் ____________ விளையாடினான்
D) பாட்டி குழந்தையை ___________ வளர்த்தார்
E) விடை தெரியவில்லை

135. 'சுறை ஆழ அம்மி மிதப்ப யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப' – இவ்வடியில் இடம்பெற்றுள்ள எதிர்சொற்களைக் காண்க.

A) ஆழ – நிலை
B) மிதப்ப – நீத்து
C) ஆழ – மிதப்ப
D) மேற்கண்ட அனைத்தும்
E) விடை தெரியவில்லை

136. பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.
(i) பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும்
(ii) இது திணை, பால், எண், இடம் காட்டும்
(iii) இது காலம் காட்டும் செயலை உணர்த்தும்

**குறியீடுகள்:**

A) (i) சரி (ii) சரி (iii) தவறு
B) (i) சரி (ii) தவறு (iii) சரி
C) (i) சரி (ii) தவறு (iii) தவறு
D) (i) தவறு (ii) சரி (iii) சரி
E) விடை தெரியவில்லை

137. 'சிறிய கடிதம்' என்பது

A) தெரிநிலைப் பெயரெச்சம்
B) இறந்தகாலப் பெயரெச்சம்
C) குறிப்புப் பெயரெச்சம்
D) முற்றெச்சம்
E) விடை தெரியவில்லை

138. 'படி' என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைத் தேர்வு செய்க.

A) படித்தான்
B) படித்தாள்
C) படித்தல்
D) படித்த
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

139. சரியான இணையைத் தேர்வு செய்க.

(அ) பனி விலகியது – தன்வினை வாக்கியம்

(ஆ) பந்தை உருட்ட வைத்தான் – தன்வினை வாக்கியம்

(இ) குழந்தையை அழச்செய்தான் – பிறவினை வாக்கியம்

(ஈ) அவன் மாணவன் – வினா பயனிலைத் தொடர்

**குறியீடுகள்:**

A) (அ), (ஆ)
B) (இ), (ஈ)
C) (அ), (இ)
D) (ஆ), (ஈ)
E) விடை தெரியவில்லை

140. **கூற்று** : வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள் என்பது முற்றெச்சம் ஆகும்

**காரணம்** : இங்கு 'படித்தனள்' என்பது எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது

A) கூற்று சரி; காரணம் தவறு
B) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
E) விடை தெரியவில்லை

141. பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

A) கமலம்
B) விஷம்
C) பெற்றம்
D) அலங்காரம்
E) விடை தெரியவில்லை

142. ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியானதைத் தேர்வு செய்க.

அரண் – அரன்

A) கோட்டை – நன்மை
B) சிவன் – கோட்டை
C) மதில் – சமயம்
D) கோட்டை – சிவன்
E) விடை தெரியவில்லை

143. கீழ்காணும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.

**கூற்று 1** : இந்தப் பெட்டி கணமாக உள்ளது

**கூற்று 2** : கவிதா ஒரு கனம் யோசித்து விடையளித்தாள்

A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
D) இரு கூற்றுகளும் தவறு
E) விடை தெரியவில்லை

144. சேர்த்து எழுதுக: 'கல் + தரை'

A) கல்தரை
B) கற்றரை
C) கல்லரை
D) கற்தரை
E) விடை தெரியவில்லை



SHANKAR IAS ACADEMY

145. ‘கடகம்’ என்பதன் எழுத்து வழக்கைத் தேர்வு செய்க.

A) ராசி
B) ஓலைப்பெட்டி
C) திண்ணை
D) சிறிய நிலப்பரப்பு
E) விடை தெரியவில்லை

146. பின்வருவனவற்றுள் இணைமொழிச் சொற்கள் பயின்று வந்துள்ள தொடரைக் காண்க.

A) மழை மேகங்கள் உருண்டு திரண்டு இருளாக காணப்பட்டன
B) வீட்டிற்கு உறவினர்கள் வந்தனர்
C) தலைமை ஆசிரியர் சிறப்பாக உரை ஆற்றினார்
D) பெண்களுக்கு கல்வி இன்றியமையாதது
E) விடை தெரியவில்லை

**பத்தியைப் படித்து விடையளிக்க (147 – 149)**

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். பன்மொழிப் புலமையும் போர்ப்பயிற்சியும் பெற்றவர். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படை திரட்டி பயிற்சி அளித்தார். அமைச்சர் தாண்டவராயரும் தளபதிகளாகிய பெரிய மருது சின்ன மருது மற்றும் சிலரும் உடன் இருந்தனர். ஆண்கள் படைப் பிரிவுக்கு மருது சகோரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலும் தலைமை ஏற்றனர். வேலுநாச்சியாரைக் காட்டிக்கொடுக்கும் படி உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினர். மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டனர். உடையாளின் பெருமையை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு ஒரு நடுகல் நடப்பட்டது.

147. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் யார்?

A) செல்லமுத்து
B) வேலுநாச்சியார்
C) முத்துவடுகநாதர்
D) மருது பாண்டியர்
E) விடை தெரியவில்லை

148. வேலுநாச்சியாரின் அமைச்சர் யார்?

A) குயிலி
B) உடையாள்
C) தாண்டவராயர்
D) முத்துவடுகநாதர்
E) விடை தெரியவில்லை

149. ஆண்கள் படைப்பிரிவிற்கு தலைமை ஏற்றவர் யார்?

A) செல்லமுத்து
B) தாண்டவராயன்
C) குயிலி
D) மருது சகோதரர்கள்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

150. இன்றைய தமிழில் __________ என்னும் விகுதியே தன்மைப் பன்மையைக் குறிக்க மிகுதியாகப் பயன்படுகிறது.

A) அம் B) ஆம்
C) எம் D) ஓம்
E) விடை தெரியவில்லை

151. தவறான இணையைத் தேர்வு செய்க.

I. உண்டும் யாம் – இறந்தகாலம்
II. யான் உண்பல் – நிகழ்காலம்
III. உண்கு யான் – எதிர்காலம்
IV. யான் வருவல் – எதிர்காலம்

**குறியீடுகள்:**

A) I B) II
C) III D) IV
E) விடை தெரியவில்லை

152. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.
குமரன் மழையில் நனையவில்லை

A) உடன்பாட்டுவினைத் தொடர் B) எதிர்மறைவினைத் தொடர்
C) பிறவினைத் தொடர் D) உணர்ச்சித் தொடர்
E) விடை தெரியவில்லை

153. அடிக்கோடிட்ட சொல்லின் எழுத்து வழக்கைத் தேர்ந்தெடு.
<u>கொரமுனுசு</u> கிராமத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறார்

A) ஊராட்சிமன்றத் தலைவர் B) வட்டார வளர்ச்சி அலுவலர்
C) கிராம நிர்வாக அலுவலர் D) ஊராட்சி மன்ற செயலர்
E) விடை தெரியவில்லை

154. பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

A) கரணத்தியலவர் B) யானை வீரர்
C) நகரமாந்தர் D) சாரணர்
E) விடை தெரியவில்லை

155. பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

A) அபயன் B) கிள்ளி
C) வளவன் D) வழுதி
E) விடை தெரியவில்லை

156. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லை பொருத்தமான தொடரில் சேர்க்க.
(அஞ்சு)

A) __________ என்பது முற்றுப்போலி
B) __________ என்பது இடைப்போலி
C) __________ என்பது கடைப்போலி
D) __________ என்பது முதற்போலி
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

157. 'தீயுழி' என்னும் சொல்லின் பொருளைக் காண்க.
A) காடு
B) வானம்
C) நரகம்
D) கடல்
E) விடை தெரியவில்லை

158. பிழை நீக்கி எழுதுக.
நம் மானிலம் இந்த ஆன்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
A) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
B) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
C) நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது
D) நம் மாநிலம் இந்த ஆன்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது
E) விடை தெரியவில்லை

159. 'VERB CONCORD' எனும் ஆங்கில சொல்லிற்கான தமிழ் சொல் காண்க.
A) வினைச் சொல்
B) வினை இயைபு
C) தொடர் இயைபு
D) இணைப்பு வினை
E) விடை தெரியவில்லை

160. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லைக் காண்க.
(i) ஓவியம் – சித்திரம்
(ii) முக்கியம் – முதன்மை
(iii) பயம் – அச்சம்

**குறியீடுகள்:**
A) (i) சரி (ii) சரி (iii) தவறு
B) (i) சரி (ii) தவறு (iii) சரி
C) (i) சரி (ii) தவறு (iii) தவறு
D) (i) தவறு (ii) சரி (iii) சரி
E) விடை தெரியவில்லை

161. கீழ்க்காணும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.
(i) கூட்டுவினைகள் மூன்று வகைப்படும்
(ii) கூட்டுவினையில் முதல் வினையானது, அடிப்படைப் பொருளைத் தரும்
(iii) கூட்டுவினையில் துணைவினையானது, திணை, பால், இடம், காலம் ஆகியவற்றைக் காட்டாது

**குறியீடுகள்:**
A) (i), (ii), (iii) தவறு
B) (i), (ii) சரி; (iii) தவறு
C) (i), (ii), (iii) சரி
D) (i) சரி; (ii), (iii) தவறு
E) விடை தெரியவில்லை

162. பின்வருவனவற்றுள் கூட்டுவினை தொடரைக் காண்க.
A) கவிதா தான் படித்ததை எழுதிப் பார்த்தாள்
B) புத்தகம் மேசையில் இருக்கிறது
C) மாணவர்கள் தேர்விற்குப் படிக்கிறார்கள்
D) சான்றோர் காட்டிய பாதையில் செல்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

163. பிழையற்ற வாக்கியத்தை தேர்க.
(I) கலை நிகழ்ச்சியில் பல மனிதர் கலந்து கொண்டனர்
(II) திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்
(III) மலரின் மணத்தை முகர்ந்து பார்த்தான்
(IV) அம்பேத்கர் சமுதாய முன்னேற்றத்திற்காக பாடுபட்டார்
A) (IV) B) (III)
C) (I) D) (II)
E) விடை தெரியவில்லை

164. பிறவினை வாக்கியத்தைத் தேர்வு செய்க.
A) சீதா பொம்மை செய்தாள் B) பொம்மை சீதாவால் செய்யப்பட்டது
C) சீதா பொம்மை செய்கின்றாள் D) சீதா பொம்மை செய்வித்தாள்
E) விடை தெரியவில்லை

165. சரியான இணையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| (I) FORMALISM | – | வடிவவியல் |
| (II) ADJECTIVE | – | பெயரடை |
| (III) AUXILIARY VERB | – | துணை வினை |
| (IV) CASE | – | வேற்றுமை |

**குறியீடுகள்:**
A) (I) மற்றும் (II) சரி B) (I), (II) மற்றும் (III) சரி
C) (I), (II), (IV) சரி D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

166. பிறமொழி சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.
(1) வேலனைப் பேருந்து நிலையத்தில் பார்த்தேன்
(2) ஊரில் மக்கள் நலனுக்காக நற்பணி சங்கம் தொடங்கப்பட்டுள்ளது
(3) குழந்தைகள் விளையாட்டுத் திடலில் விளையாடினர்
(4) அருங்காட்சியகத்தில் அபூர்வமான பொருட்கள் உள்ளன
**குறியீடுகள்:**
A) (1), (2), (4) சரி (3) தவறு B) (1) தவறு (2), (3), (4) சரி
C) (1), (2), (3) சரி (4) தவறு D) (1) ,(3) சரி (2),(4) தவறு
E) விடை தெரியவில்லை

167. தன்வினை வாக்கியத்தைத் தேர்வு செய்க.
(I) குழந்தை சோறு உண்டது
(II) தாய் குழந்தைக்கு சோறு உண்பித்தாள்
(III) பேருந்து இயங்கியது
(IV) பேருந்தை இயக்கினான்
**குறியீடுகள்:**
A) (I) மற்றும் (II) B) (II) மற்றும் (III)
C) (I) மற்றும் (III) D) (II) மற்றும் (IV)
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

168. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.
பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.
A) நேர்கூற்று வாக்கியம்
B) அயற்கூற்று வாக்கியம்
C) கட்டளை வாக்கியம்
D) வினா வாக்கியம்
E) விடை தெரியவில்லை

169. அயற்கூற்று தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க.
(i) படர்க்கைப் பெயர் இடம்பெறும்
(ii) மேற்கோள் குறிகள் வாரா
(iii) சுட்டுப் பெயர்கள் அது, அவை என மாறும்
(iv) இணைப்புச் சொற்கள் இடம்பெறாது
**குறியீடுகள்:**
A) (i), (ii), (iv) சரி (iii) தவறு
B) (i) தவறு (ii), (iii), (iv) சரி
C) (i), (ii), (iii) சரி (iv) தவறு
D) (i), (iii), (iv) சரி (ii) தவறு
E) விடை தெரியவில்லை

170. ஆங்கில பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழியைக் காண்க.
Blood is thicker than water.
A) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
B) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
C) எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்
D) பட்ட காலிலே படும் கேட்ட குடியே கெடும்
E) விடை தெரியவில்லை

171. எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.
A) சிந்து நாகரீகம் திராவிட நாகரீகம் என அறிஞர்கள் கருதுகின்றனர்
B) நான் பார்த்தவர் இவர் இல்லை
C) போர் காரணமாக மத்திய கிழக்கு பகுதிகளில் பதட்ட நிலை நிலவுகிறது
D) சுவரில் எழுதக் கூடாது
E) விடை தெரியவில்லை

172. ஒரு பொருள் தரும் பல சொல்: குதிரை
(i) பன்னகம்
(ii) துரகம்
(iii) பரி
(iv) மா
**குறியீடுகள்:**
A) (i), (ii), (iv) சரி (iii) தவறு
B) (i) தவறு (ii), (iii), (iv) சரி
C) (i), (ii), (iii) சரி (iv) தவறு
D) (i), (iii), (iv) சரி (ii) தவறு
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

173. இருபொருள் தருக: ஒலி

A) அரவம், தொனி
B) கதிரவன், விளக்கு
C) புகழ், பெருமை
D) மின்னல், அறிவு
E) விடை தெரியவில்லை

174. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (தவண்டை)

A) காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை __________
B) பெரிய உடுக்கையைத் __________ என்பர்.
C) சிறு உடுக்கையைத் __________ என்பர்.
D) குரல் வழி இசையைத் __________ என்பர்.
E) விடை தெரியவில்லை

175. பொருள் தருக – சென்னீர்

A) சிவந்த நீர்
B) செல்கின்ற நீர்
C) கடல் நீர்
D) நல்ல நீர்
E) விடை தெரியவில்லை

176. பின்வருவனவற்றுள் தவறான இணைகளைக் குறிப்பிடுக.

(அ) தண்ணென் கதிர் – சூரியக் கதிர்
(ஆ) அழற் கதிர் – நிலவு ஒளி
(இ) அணங்கு – தெய்வப்பெண்
(ஈ) நீத்தம் – வெள்ளம்

**குறியீடுகள்:**

A) (அ), (ஆ)
B) (இ), (ஈ)
C) (அ), (இ)
D) (ஆ), (ஈ)
E) விடை தெரியவில்லை

177. புல்லியர் என்பதன் பொருளைத் தேர்க.

A) சான்றோர்
B) அறிவுடையவர்
C) குற்றமற்றவர்
D) அறிவற்றவர்
E) விடை தெரியவில்லை

178. தவறான இணையைக் காண்க.

A) One flower makes no garland - தனிமரம் தோப்பாகாது
B) Look before you leap - ஆழம் அறியாமல் காலை விடாதே
C) No rains no grains - மாரியல்லது காரியம் இல்லை
D) Command your man and do it yourself - கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
E) விடை தெரியவில்லை

179. பொருத்துக.

| | |
|---|---|
| a) சுரம் | 1. கரும்பு |
| b) திரு | 2. வழி |
| c) வேழம் | 3. சோரி |
| d) இரத்தம் | 4. இலக்குமி |

SHANKAR IAS ACADEMY

**குறியீடுகள்:**

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

E) விடை தெரியவில்லை

180. ஒரு பொருள் தரும் பல சொற்களில் பொருந்தாதைத் தேர்க.

A) கேசரி
B) மடங்கல்
C) அரி
D) அசுவம்
E) விடை தெரியவில்லை

181. சரியான இணையைக் கண்டறிக.

(I) புள் – பரவை
(II) தருக்கள் – மரங்கள்
(III) கானம் – பொன் காசு
(IV) தமையனார் – அண்ணன்

**குறியீடுகள்:**

A) (I) மற்றும் (II)
B) (II) மற்றும் (III)
C) (I) மற்றும் (III)
D) (II) மற்றும் (IV)
E) விடை தெரியவில்லை

182. சரியான இணைப்புச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க.

நாளை புயல் கரையைக் கடக்கிறது. மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

A) நாளை புயல் கரையைக் கடக்கிறது ஏனெனில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்
B) நாளை புயல் கரையைக் கடக்கும் அதேபோல மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்
C) நாளை புயல் கரையைக் கடக்கும் ஆனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்
D) நாளை புயல் கரையைக் கடக்கிறது ஆகையால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்
E) விடை தெரியவில்லை

183. எழுத்து வழக்கில் அமைந்த தொடரைக் கண்டறிக.

A) எனக்கு அஞ்சு ரூபாய் கொடு
B) கல்லூரி கோவில் அருகாமையில் உள்ளது
C) மனத்தில் தைரியம் வேண்டும்
D) ஊசியில் நூலைக் கோர்த்தான்
E) விடை தெரியவில்லை

184. பொருந்தா சொல்லைத் தேர்வு செய்க.

A) பிரணவ கேசரி
B) வித்யா பாஸ்கர்
C) வேதாந்த பாஸ்கர்
D) புதுநெறி கண்ட புலவர்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

185. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.
நூலின் பயன் படித்தல் ___________ கல்வியின் பயன் கற்றல்.
A) அதனால்
B) எனில்
C) ஆகையால்
D) எனவே
E) விடை தெரியவில்லை

186. மொய்ம்பு என்பதன் பொருள் தருக.
A) வலிமை
B) நோவு
C) துன்பம்
D) கோழை
E) விடை தெரியவில்லை

187. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க:
(ஓரெழுத்து)
A) தமிழில் நாற்பது ___________ ஒரு மொழிகள் உள்ளன
B) தமிழில் நாற்பத்து இரண்டு ___________ ஒரு மொழிகள் உள்ளன
C) தமிழில் நாற்பத்து மூன்று ___________ ஒரு மொழிகள் உள்ளன
D) தமிழில் நாற்பத்து ஒன்று ___________ ஒரு மொழிகள் உள்ளன
E) விடை தெரியவில்லை

**கீழ்காணும் பத்தியைப் படித்து விடையளிக்க (188-192)**

அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு; அறத்தின் வழியே பொருளைக் கண்டது; அவ்வறத்தின் வழியே இன்பத்தினை எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர். அறத்தினைக் கைக்கொண்டதனால் வீடு என ஒன்று வேண்டாததாயிற்று. பழந்தமிழர் அன்பு வழியினர். அறத்துக்கே அன்பு சார்பு என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தினையும் ஏற்றிப் போற்றினர். 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்னும் புறப்பாடல், வீரத்தினை முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர், பெண்களின் பெருவீரத்தினைப் பாடுகிறார். முதல்நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள், பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே, அவள் துணிவு!

188. 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' எனும் பாடல் வரி இடம் பெற்ற நூலைத் தேர்வு செய்க.
A) அகநானூறு
B) புறநானூறு
C) கலித்தொகை
D) பரிபாடல்
E) விடை தெரியவில்லை

189. பெண்களின் பெருவீரத்தினைப் பாடியவர் யார்?
A காக்கைப் பாடினியார்
B) வெள்ளிவீதியார்
C) காவற்பெண்டு
D) ஒக்கூர் மாசாத்தியார்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

190. என்னே, அவள் துணிவு! – இது எவ்வகைத் தொடர்?

A) செய்தித் தொடர் B) வினாத் தொடர்
C) உணர்ச்சித் தொடர் D) கட்டளைத் தொடர்
E) விடை தெரியவில்லை

191. அறத்துக்கே __________ சார்பு என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர் தமிழர்.

A) வீரம் B) கற்பு
C) அன்பு D) பொருள்
E) விடை தெரியவில்லை

192. பிரித்து எழுதுக: புறப்பாடல்

A) புற + பாடல் B) புறம்+ பாட்டு
C) புறம் + பாடல் D) புறப் + பாடல்
E) விடை தெரியவில்லை

193. "இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள எதிர்ச் சொற்களை எடுத்து எழுதுக.

A) இன்சொல் × இனிதீன்றல்
B) இனிதீன்றல் × எவன்கொலோ
C) வன்சொல் × இனிதீன்றல்
D) இன்சொல் × வன்சொல்
E) விடை தெரியவில்லை

194. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (ஆமா)

A) __________ காட்டுப் பசுவைக் குறிக்கும்
B) __________ முள்ளம்பன்றியைக் குறிக்கும்
C) __________ பெண் மானைக் குறிக்கும்
D) __________ கரடியைக் குறிக்கும்
E) விடை தெரியவில்லை

195. ஆங்கில பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழி காண்க.
Something is better than nothing

A) பழி ஓரிடம் பாவம் ஓரிடம்
B) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்
C) காலத்திற்கேற்ற கோலம் கொள்
D) ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக்கரை
E) விடை தெரியவில்லை

196. அல்லி மலர் என்னும் பொருள் தரும் சொல்லைத் தேர்க.

A) பதுமம் B) அரக்கு ஆம்பல்
C) கமலம் D) கன்னிகை
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

197. கீழ்கண்ட கூற்றுகளில் குறிப்பிட்டுள்ள தொடர் வகையைக் காண்க

I. தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும்

II. இங்கு, இப்போது, இவை எனச் சுட்டுப்பெயர்கள் வரும்

III. நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்

**குறியீடுகள்:**

A) நேர்கூற்றுத் தொடர்
B) அயர்கூற்றுத் தொடர்
C) எழுவாய்த் தொடர்
D) விளித் தொடர்
E) விடை தெரியவில்லை

**கீழ்கண்ட பத்தியைப் படித்து விடையளிக்க (198–200)**

தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும்" எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி.கே.சி. யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி.கே.சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி.கே.சி. ஏற்றிய இலக்கியஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

198. இரசிகமணி என்று அழைக்கப்படுபவர் யார்?

A) திரு.வி. கல்யாணசுந்தரனார்
B) டி.கே. சிதம்பரனார்
C) சங்கரதாச சுவாமிகள்
D) ஆபிரகாம் பண்டிதர்
E) விடை தெரியவில்லை

199. இரசிகமணி அவர்கள் வகித்த பதவிகளில் தவறானதைத் தேர்வு செய்க.

A) வழக்கறிஞர்
B) சென்னை மாநில மேலவையின் உறுப்பினர்
C) அறநிலையத் துறை ஆணையர்
D) நாடாளுமன்ற உறுப்பினர்
E) விடை தெரியவில்லை

200. டி.கே.சி-யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பின் பெயர் யாது?

A) வட்டத் தொட்டி
B) சதுரத் தொட்டி
C) இலக்கியத் தொட்டி
D) இலக்கிய மன்றம்
E) விடை தெரியவில்லை

* * * * * *

SHANKAR IAS ACADEMY